//மின்னஞ்சல்மூலம்//

**பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் ( தொழிற்கல்வி ) செயல்முறைகள், சென்னை – 06**

**ந.க.எண்: 04632/வி2/இ1/2022 நாள் : .01.2022**

**பொருள்:** பள்ளிக்கல்வி – 2022–2023 ஆம் கல்வியாண்டில் **அரசு உதவி பெறும்/பகுதி உதவி பெறும் உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளில்** பணிபுரியும் தலைமையாசிரியர்களுக்கு தலைமைப் பண்புப் பயிற்சியளித்தல் – சார்பாக.

**பார்வை:**

1. **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்** அவர்களின் அறிவிப்பு
2. சென்னை–6, பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் ( தொழிற்கல்வி ) செயல்முறைகள் ந.க.எண்:04632/வி2/இ1/2022 நாள் : 30.12.2022

......

பார்வை 1–இல் காணும் **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்** அவர்களின் அறிவிப்பின்படி தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தலைமைப்பண்புப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து, பார்வை –2 இல் 23.01.2023 முதல் 01.02.2023 வரை உள்ள Batch 13 முதல் 18 வரை அணிகளில் உள்ள தலைமையாசிரியர்களுக்கு நடைபெறவிருந்த தலைமைப் பண்பு பயிற்சி பிப்ரவரி மாதத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மாற்றம் செய்யப்பட்ட பயிற்சி தற்போது 06.02.2023 முதல் 25.02.2023 வரை உள்ள Batch 13 முதல் 27 வரை உள்ள **அரசு உதவி பெறும்/பகுதி உதவி பெறும் பள்ளிகளில்** பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள்/ பொறுப்பு தலைமை ஆசிரியர்களுக்கு இணைப்பு –1இல் குறிப்பிடப்பட்டுள்ள மையத்தில் தலைமைப்பண்புப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் இணைப்பு –3 ல் குறிப்பிடப்பட்டுள்ள தலைமையாசிரியர்கள் முதன்மை கருத்தாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சியில் பங்கேற்கும் தலைமை ஆசிரியர்கள் / பொறுப்பு தலைமை ஆசிரியர்கள் பட்டியல் (இணைப்பு –2) மற்றும் முதன்மைக் கருத்தாளர்களின் பட்டியல் (இணைப்பு–3) இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள தலைமையாசிரியர்களை கீழ்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றி பணியிலிருந்து விடுவிக்க முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. பயிற்சி தொடங்கும் முந்தைய தினம் **மாலை 05.00 மணிக்கு பிறகு இரவு 8.00 மணிக்குள்** பயிற்சி வளாகத்திற்குள் வந்து தங்களது பெயரினை பதிவு செய்யவேண்டும். மேலும் கண்டிப்பாக பயிற்சி மையத்திலேயே தங்கி பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.
2. அனைத்து தலைமையாசிரியர்கள் / பொறுப்பு தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதன்மைக் கருத்தாளர்கள் பயிற்சி நிறைவடையும் மூன்றாம் நாளில் மாலை 6.00 மணி வரை, பயிற்சியில் இருத்தல் வேண்டும்.

இப்பயிற்சி சார்பான விவரங்களை பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைத்து தலைமை ஆசிரியர்கள் / பொறுப்பு தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் பயிற்சியின் ஒருங்கிணைப்பாளர்களாக திருமதி. ஞா.ஏஞ்சலின்ரூபி, உதவிப்பேராசிரியை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –6 (கைபேசி 7373005059) என்பார் செயல்படுவார் எனவும், இவரை தொடர்பு கொண்டு பயிற்சியில் கலந்து கொள்வதை உறுதி செய்து கொள்ள அறிவுறுத்த வேண்டும் என அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

1. **பயிற்சி நடைபெறும் மையங்களின் பட்டியல்.**
2. **தலைமையாசிரியர்களின் பெயர் பட்டியல்.**
3. **முதன்மைக் கருத்தாளர்களின் பெயர் பட்டியல்**

**ஓம்/–வெ.ஜெயக்குமார்**
**இணை இயக்குநர்( தொழிற்கல்வி )**

**பெறுநர்:**அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள்.